
ஸ்ரீ ஹரி :

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி



வேணு : 1 ஆகஸ்டு 1995 கானம் : 2

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்
# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 1 ஆகஸ்டு 1995 கானம் : 2


## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | என்னை ஆட்கொண்ட குருநாதர் | 4 |
| 3. | ஒரே ஒரு குறை | 8 |
| 4. | யுக தர்ம ஸ்தாபகர்கள் | 10 |
| 5. | எது ப்ரவசனம்? | 13 |
| 6. | ச்ரவணத்தின் அவசியம் | 14 |
| 7. | பக்தி | 15 |
| 8. | தமோ குணத்தை அடையாளம் கண்டு கொள்வோம் | 17 |
| 9. | யார் வைராக்யசாலி? | 20 |
| 10. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-2 | 23 |
| 11. | செய்திகள் | 29 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



சென்னை, மேற்கு மாம்பலம் ஸ்ரீ அயோத்யா மண்டபத்தில் நடைபெற்ற
'ஸங்கீர்த்தன ஸப்தாஹம்' வைபவத்தில் ஸ்ரீ குருஜி பூஜை செய்யும் காட்சி.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

*ராகம் : ஹிந்தோளம்* *தாளம் : ஆதி*

*பல்லவி*

**உன் கருணை என்பது என்னவோ கண்ணா**
**உண்மையை சொல்லிடுவாய் ஶ்யாமஸௌந்தரா (உன்)**

*சரணம்*

**நிதியும் பதவியும் சுக போக வாழ்க்கையும்**
**உன் கருணை என்றிடுவர் அறிவிலா மூடர்**
**மீண்டும் மீண்டும் பிறவிப் பிணியில் தள்ளும்**
**இவை எப்படி உந்தன் கருணையாகும் (உன்)**

*சரணம்*

**உண்மையும் தவமும் உயர் ஒழுக்கமும்**
**உன் சரணத்தில் திடமான பக்தியும்**
**ஞானமும் விரக்தியும் வருமாகில் எந்தனுக்கு**
**அதுவே உன் கருணை தாமரைக் கண்ணா (உன்)**

*துரிதம்*

**சரணமென்றடைந்தேன் ஆனைக் கருளியவா**
**முரளீதரனுக்கு அருள்வது எந்நாளோ?**

---

## ஒரு விளக்கம்

'மதுர முரளி' முதல் இதழ் தலையங்கத்தில் (பக்கம் 3) குறிப்பிட்டிருந்தபடி, ஆன்மீக விஷயமான சந்தேகங்களுக்குப் பதில் தரும் ஒரு அங்கம் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. பக்தர்கள், தங்கள் குடும்பப் பிரச்னைகள் பற்றிய வினாக்களைத் தவிர்த்து, தெய்வீக சாதனைகளைப் பற்றிய சந்தேகங்களை மட்டும் எழுதி அனுப்பக் கோருகிறோம்.

# என்னை ஆட்கொண்ட குருநாதர்

முதன் முதலாக ஸ்ரீ குருஜியை தரிசிக்கும் பாக்யம் எனக்கு 1989-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் கிட்டியது. சென்னை கே.கே. நகர் பாரதிதாசன் காலனி L51-K என்ற இல்லத்தில் வசித்து வந்த என் நெருங்கிய உறவினர் வாயிலாக அந்த வாய்ப்பு கிட்டியது. அப்பொழுது ஸ்ரீ குருஜி, வந்தவர்களை விசாரிக்கும் முறையும், ஊஞ்சலில் வைத்திருந்த ஸ்ரீ மஹா பெரியவாளின் படமும் என்னைக் கவர்ந்தன. நான் அங்கு வரும் பொழுது எல்லாம் அவரைத் தரிசிப்பேன். பிறகு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு எனக்கு அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் வாய்த்தது. அச்சமயத்தில் அவர் பக்தர்களின் குறைகளைக் கேட்கும் முறையும், அதற்குப் பதில் சொல்லும் விதமும், அவர் வேஷ்டியைப் பிடித்துக் கொண்டு நடக்கும் அழகும், உட்கார்ந்து கொள்ளும் பாணியும் இக்காலத்தில் திரைப்படங்கள், டி.வி. முதலியன மூலம் குழந்தைகளிடம் உண்டாக்கும் பாதிப்பை என்னிடம் ஏற்படுத்தியது. இப்படியிருக்கையில்...

நான் வேலை செய்து கொண்டிருந்த நிறுவனத்திலிருந்து வேறோர் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்வதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தேன். நாட்கள் சென்று கொண்டிருந்தன. அது பற்றி ஒரு சமயம் ஸ்ரீ குருஜியிடம் கூறிய போது ''நீ பழைய கம்பெனியிலேயே இரு'' என்று கூறினார். எப்போதும் போல், என் குணம் புதிய நிறுவனத்தில் வேலைக்கு முயற்சி செய்தது. அதனால் சில ஆயிரங்கள் நஷ்டம் ஏற்பட்டது. பிறகு நான் பழைய வேலையிலேயே சேர்ந்தேன். சில வாரங்கள் சென்றிருக்கும். புதிய கம்பெனியிலிருந்து அழைப்பு வந்தது. எப்போதும் போல் ஆசை என்ற பேய் மேலோங்க, நான் ஸ்ரீ குருஜியிடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டேன். அவர் ''இப்பொழுதுதானே போய் உள்ளாய்? உனக்கு விடுமுறை கிடைக்குமா?'' என்று கேட்டார். நான் ''தாய், தந்தை, மனைவி,

குழந்தைகள் உடல் நிலை மோசமாக இருக்கின்றது என்றால் இருபத்து நாலு மணி நேரத்தில் அனுப்பி விடுவார்கள்'', என்று கூறினேன். அவர், ''யாரை சீரியஸ் ஆக்கலாம்'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். நான் உடனே, ''என் தந்தையை'' எனக் கூறினேன். அவர் ஒரு நிமிட மவுனத்திற்குப் பிறகு ''சரி'' என்றார். அப்போது அந்த ஒரு நிமிட மௌனத்தின் பொருள் புரியவில்லை. புதிய கம்பெனி வேலை மீண்டும் ஜவ்வு மாதிரி இழுத்துக் கொண்டே இருந்தது. எனக்குக் கூட இருப்பதைவிட்டு விட்டுப் பறப்பதற்கு அலைவது போல் தோன்றியது. ஆனால் சில தினங்களில் என் தந்தை உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டார். என்னுடைய பொய் விளையாட்டு வினையாகிவிட்டது மாதிரி தோன்றியது. ஸ்ரீ குருஜியிடம் இதைப் பற்றித் தெரிவித்தேன். அதற்கு அவர், ''நீ நினைப்பது போல் இல்லை. நடப்பது தான் நடக்கும்,'' என்றார்.

அது தனுர் மாதக் காலம். காலைப் பூஜைக்கு எல்லோரும் வந்து கலந்து கொள்வார்கள். எனக்கு என்ன தோன்றியதோ, அன்று கலந்து கொண்டேன். பூஜை முடிந்து, வெளியே வந்த ஸ்ரீ குருஜி என்னைப் பார்த்து, 'வா, ஆராவமுதனைப் பார்த்து விட்டு வரலாம்' எனக் கூறினார். நான், 'எனக்கு எந்த ஆராவமுதனையும் தெரியாது' என்றேன். அவர் கும்பகோணம் போகிறார் என்பது எனக்குத் தெரியாது. அவர் கூட இன்னும் சிலரும் போகிறார்கள் என்பதையும், அவர் கூறிய ஆராவமுதன் கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் என்றும் சில நிமிடங்களில் அறிந்து கொண்டேன். நானும் அவர் கூட கும்பகோணத்திற்குப் புறப்பட்டேன். நாங்கள் மதுராந்தகத்தை அடைந்த பொழுது ஸ்ரீ குருஜி என்னிடம், 'உன் அப்பாவிடம் இன்று வருகிறேன் என்று ஏதாவது கூறினாயா?' என்று கேட்டார். நான், 'அப்படி எதுவும் இல்லை. இன்று அப்பாவை வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள்' என்றேன்,

பிறகு நாங்கள் ஸ்ரீ ஆத்ம போதேந்தராள் அதிஷ்டானம் இருக்கும் வடவாம்பலத்தை அடைந்தோம். அங்கு இருபது நிமிஷங்கள் இருந்து விட்டு, மதியம் கும்பகோணம் போய்ச் சேர்ந்தோம். மாலை நாலரை மணி அளவில், ஸ்ரீ போதேந்தராள் ஜீவ சமாதியடைந்த கோவிந்தபுரம் அதிஷ்டானத்தை அடைந்தோம். நானும்

என்னை அறியாமல் அந்த அதிஷ்டானத்தில் சில நிமிஷங்கள் ராம ஜபம் செய்தேன். ஸ்ரீ குருஜி, 'இங்கு வந்து போனால் உன் கணக்குக்குச் சில ஆயிரம் ராம ஜபத்தைப் பெரியவர் தந்து விடுவார். அவர் இன்னும் ராம ஜபம் செய்து கொண்டே இருக்கிறார்' என்றார். பிறகு நாங்கள் திருவிடைமருதூர் பயணத்தை மேற்கொண்டோம். அவர், 'பெரியவாளிடம் நான் அந்த லிங்கத்தைத் தரிசித்தேன்; கேதார்நாத் ஐஸ் லிங்கத்தைத் தரிசித்தேன்' என்றால் அவர், ''திருவிடைமருதூர் மகாலிங்கத்தைத் தரிசித்து இருக்கிறாயா என்பார்'' என்று கூறினார். அந்தத் திருத்தலத்தின் புராணத்தைப் பற்றி ஸ்ரீ குருஜி எங்களுக்கு எடுத்துரைத்தார். அங்கிருந்து நாங்கள் ஸ்ரீ உப்பிலியப்பன் கோயிலுக்குப் பயணமானோம்.

போகும் வழியில் ஸ்ரீ குருஜி என்னிடம், ''எமனுக்கு இந்த மாதம் தான் பலம் அதிகம். அவருக்கு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இடத்தில் பலம். இந்த மாதம் பல்லில் பலம். ஆதலால் இந்த மாதத்தில்தான் பலர் இறந்து போவார்கள். இவ்வாறு ஸ்ரீ குருஜி என்னிடம் கூறிய கிட்டத்தட்ட இதே சமயத்தில் சென்னையில் என் தந்தையும் ஆச்சார்யன் திருவடியை அடைந்தார் என்பதை சென்னை வந்தடைந்த பொழுது அறிந்தேன். இந்நிகழ்ச்சியை நான் விவரித்துக் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால், நான் என் தந்தையை விட்டு நெடுந்தூரத்திலிருந்த போதிலும், சரியான சமயத்தில் குருஜி என்னை சென்னையில் கொண்டு வந்து சேர்த்தார். மேலும் அவர் காலமான தினத்தன்று நான் ஸ்ரீ குருஜியுடன் பல பெரிய மஹான்களின் அதிஷ்டானங்களைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் நம் குருநாதர் அளித்தார் என்பதைக் காட்டுவதற்காகவே இச் சம்பவத்தை எழுதியுள்ளேன்.

என்னை மிகவும் பாதித்த மற்றொரு நிகழ்ச்சி. ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு ''சிரத்தாஞ்சலி'' மதுரபுரியில் ஸ்ரீ புதுப்பெரியவாளை அழைத்துக் கொண்டு வந்து நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டு அவரிடம் தெரிவித்தபோது, தான் ஒரு வருடக் காலம் வெளியே செல்வதாக இல்லை என்று ஸ்ரீ சங்கரனிடம் கூறிவிட்டார். நாங்களும் பல சிறந்த ஆன்மீகப் பேச்சாளர்களை அழைத்து, நல்ல அழைப்பிதழ்களையும் அச்சடித்து வேண்டிய ஏற்பாடுகளை

செய்துவிட்டோம். இதற்கிடையில் ஒரு நாள் ஸ்ரீ குருஜி, 'ஸ்ரீ மஹாப் பெரியவாளுக்கு நாம் அஞ்சலியை இப்படிச் செய்யக்கூடாது. ஏதோ விழாவை ஏற்பாடு செய்தாகிவிட்டது. ஆதலால் நடப்பது நடக்கட்டும் என்றிருக்கிறேன்' என்று கூறினார். அப்பொழுது நாங்கள் எல்லாம் ஏற்பாடு போல் நடக்கும் என நம்பி இருந்தோம். ஆனால் ஸ்ரீ குருஜிக்கு இது நடக்காது என்று தெரிந்தும், பேசாமல் இருந்து விட்டார்.

நிகழ்ச்சிக்கு முந்தின நாள் முதல் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அன்றிரவு பெய்த பெரு மழையினால் சாலைகள் பாதிக்கப்பட்டு போக்குவரத்துக்குத் தடங்கல் ஏற்பட்டது. கடைசி நேரத்தில் விழாவை ரத்து செய்யும்படி ஆகிவிட்டது. இதில் ஈடுபட்டு வந்த எனக்கு, 'நான் ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு ''சிரத்தாஞ்சலி'' செய்ய அருகதை அற்றவன்'; ஆச்சார நியமனத்தோடு இருக்கிறவர்கள் செய்ய வேண்டிய காரியத்தை என்னைப் போன்ற பிராம்மண தர்மத்தை அனுஷ்டானம் செய்யாமல் வாழும் நபர்கள் செய்ய முற்பட்டால், எவ்வாறு நடக்கும்?' என்று தோன்றியது. ஆனால் அப்படியன்று என்பது போல் மஹாப் பெரியவாள் சித்தி அடைந்த நாளன்று நடத்திய 'சிரத்தாஞ்சலி'யில் கலந்து கொள்ளும் பாக்கியத்தை எனக்கு ஸ்ரீ குருநாதர் அருளினார் என்றே கூற வேண்டும். வெகு தொலைவிலிருந்த நான் மேற்கூறிய நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்தது மாதிரி தோன்றியது. இல்லாவிட்டால், நான் சென்னையிலிருந்து போய்ச் சேர்ந்த ஐந்து வாரங்களில் மீண்டும் வருவது இயலாத காரியமாய் இருந்திருக்கும்.

**- பி.எஸ். ரங்கநாத்**

---

*வீடுகள் நாம் கட்டுவது, ஸாதுக்கள் வந்து தங்கவும், ஸத் ஸங்கம் நடக்கவும்தான். எந்த வீட்டிற்கு ஸாதுக்கள் வருவதில்லையோ, ஸத் விஷயங்கள் நடப்பதில்லையோ அது வீடு இல்லை, காடுதான்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# ஒரே ஒரு குறை

- ஸ்ரீ குருஜி

ஸ்ரீநிவாச பெருமாளை தரிசனம் செய்ய வேண்டும் என்று அடிக்கடி எனக்குத் தோன்றும். எனக்கு, கூட்டத்தில் போனாலே தலை சுற்றுவது போல் மயக்கம் வந்து விடும். என் கூட வருபவர்களுக்கு தொந்தரவு ஆகிவிடும் என்பதால் மனதிற்குள்ளேயே இந்த ஆசையை அடக்கிக் கொண்டு, இப்படி தாபத்துடன் இருப்பதும் ஒரு தவம்தான் என்று சமாதானப்படுத்திக் கொண்டு விடுவேன். ரொம்ப கட்டுக்கடங்காமல் போகும் பொழுது, நானாக எப்படியோ சமாளித்துக் கொண்டு சென்று விடுவேன். அப்படி நான் தனியாக போகும் சமயங்களில் ஆச்சர்யமாக கூட்டமே இருக்காது. வெளியில் யாரிடமும் சொன்னால் நம்பக்கூட மாட்டார்கள். அல்லது அப்படி கட்டுக்கடங்காமல் போகும் பொழுது, ஆச்சர்யமாக யாராவது வந்து என்னை திருப்பதிக்கு அழைத்துக் கொண்டு போவார்கள். யாராவது அழைத்துச் சென்றால் ஏதாவது சேவைக்கு டிக்கட் வாங்கி தரிசனம் செய்துவிடுவேன். அப்படி நான் ஸ்ரீநிவாசப் பெருமாளைப் பார்க்கும் பொழுது எனக்கு ஆனந்தம் தாங்காது. பகவானுடைய அழகான சரணங்கள், தங்க நூபுரங்கள், பீதாம்பரம், சாளக்ராம மாலை, ஸஹஸ்ரநாம மாலை, வரத ஹஸ்தம், சங்கு சக்ரம், பத்மாவதி, அலமேலு மங்காத் தாயார், பாத ரேணு, மலர்ந்த கண்கள், க்ரீடம், துளஸி மாலை என்று ஆனந்தமாக அனுபவிப்பேன். என் மனதை விட்டு அகலாமல் எப்பொழுதும் அதே ஞாபகமாக இருக்கும். அப்படி பகவானை தரிசனம் செய்யும்பொழுது, என் மனதில் உலகத்தில் கோடானுகோடி ஜீவன்கள் எப்படியெல்லாமோ வாழ்கிறார்கள் என்று தோன்றும். ஆனால் என்னைப் பார்த்தால் எனக்கே பெருமையாக இருக்கும். எதற்காக? இதே ஸ்ரீநிவாசனைத் தானே நாம் பிரதிஷ்டை செய்துள்ளோம்! யோக தேவதையாக அவனுடைய ஸான்னித்யத்தால் எத்தனை பாகவதர்கள் வந்து நாம ஸங்கீர்த்தனமும், ராதா கல்யாணமும், பிரவசனங்களும், ஆனந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன! அவனுடைய க்ருபையாலேதானே நமக்கு பல

க்ஷேத்ரங்களின் யாத்திரை லபிக்கின்றது. அவர் க்ருபையால்தானே ப்ருந்தாவனத்தில் கிருஷ்ண மந்திரம் உருவாகிறது! இதற்கெல்லாம் என்னைப் பொருட்டாகி வைத்திருக்கும் காரணம் என்ன? ஏதோ வைகுண்டபதியின் கடுகளவு பார்வை என் பக்கம் திரும்பியுள்ளதே காரணம். உலகத்தில் அநேக மக்கள் எவ்வளவோ விதமான குடும்ப சிரமங்களையும், தேசத்தின் சிரமங்களையும் என்னிடம் கூறுகின்றார்கள். எனக்கு எதுவும் தெரியவுமில்லை. என்னை எதுவும் பாதிக்கவுமில்லை. அவனுக்குப் பூஜைகள் பண்ணுவது, அவனுடைய கதையைக் கேட்பது, நாம ஸங்கீர்த்தனம் செய்வது, ஸாதுக்களுக்கு சேவை செய்வது, க்ஷேத்ர யாத்திரை செல்வது, பேசினாலும் அவனுடைய பேச்சாகவே பேசுவது என்று ஆக்கிவிட்டான் அவன். இது என் சாமர்த்தியத்தால் ஆகக்கூடிய காரியமா என்ன? எல்லாம் அவனுடைய க்ருபையால் சுலபமானது. ஆகவே தான் 'குறையொன்றுமில்லை கோவிந்தா' என்று நித்யம் பாடுகின்றேன். ஆனாலும் உன் சன்னதியில் வரும் பொழுது ஒரு பெரிய குறை என் மனதை உறுத்துகின்றது. இத்தனை க்ருபை செய்துவிட்டு ஸத்ய ஸ்வரூபமான உன்னை ப்ரத்யக்ஷமாகப் பார்த்தும், கண்களில் ஒரு துளி நீர் விராமல், கதறி அழாமல், தூண்களில் போய் முட்டிக்கொள்ளாமல், மூர்ச்சையாகாமல் வந்து விடுகின்றேன். அது தான் பெரிய குறை. கோயிலில் நிற்கும் உன்னை கல் என்கிறார்கள் அறியாதோர். நீ கல் இல்லை. என்னைப் போல அநேகர் உன் சன்னதிக்கு பொருட்காட்சி சாலைக்கு வந்து போவது போல் போகின்றோமே, நாங்கள் தான் கற்கள். உன்னுடைய கருணையை நினைத்து, அழுது, உருகி, உன்னுடனே கலக்கும் நாள் என்று வருமோ அன்று தான் எனக்கு ஒரு குறையுமில்லை.

---

*உலகத்தில் நாம் எந்த கார்யத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் ஸதா நாம ஜபம் செய்து கொண்டே இருக்க வேண்டும். பகவானை மறந்த ஒவ்வொரு நொடியும் வீண்தான்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# யுக தர்ம ஸ்தாபகர்கள்

ஸ்ரீய:பதியும், க்ருபாஸிந்துவுமான பகவான் ஜீவர்கள் அனைவரும் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேறி ப்ரும்மானந்தத்தை அடைய மனு, யாக்ஞவல்க்யர், பராசரர், கௌதமர், காத்யாயனர் போன்ற பல்வேறு முனிவர்கள் மூலம் வர்ணாச்ரம தர்மத்தை உயிராகக் கொண்ட கர்ம மார்க்கத்தையும் அது போலவே ஸனகாதி யோகிகள் மூலம் மோக்ஷ மார்க்கத்தையும் அருளினார். இதுவே ஸனாதன தர்மம்.

இந்த உயர்ந்த தர்மம் காலப்போக்கில் அதுவும் கலியில் மிகவும் நலிந்து விட்டதை கண்கூடாகக் காண்கிறோம். ரிஷிகள் காட்டிய தர்மங்களை கேட்கவோ படிக்கவோ நேரிடும்போது ஸாதுக்களாக இருப்பவர்கள் கண்ணீர் விட்டு, நம்மால் இந்த வழியில் செல்ல இயலவில்லையே என தவிப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லையே! பாரதம் முழுவதும் பிற மதத்தவர்கள் ஆக்ரமிப்பு ஏற்பட்டபோது வர்ணாச்ரம தர்ம அனுஷ்டானங்களும், வேத சாஸ்த்ர அத்யயனங்களும் கூட ஆங்கிலேயர்களது கல்வி முறை, அரசாங்க வேலை வாய்ப்பு என்ற மாயையில் மங்கிவிட்டது. ஸர்வ தர்மத்திற்கும் கர்மாக்களுக்கும் ஆதாரம் வேதம். அதில் நம்பிக்கை குறைந்துவிட்டது! ஸந்த்யா காயத்ரீ கூட தவறாமல் செய்ய இயலாதவர்கள் அவைதீகர்கள் தானே! இன்று இப்படித்தானே உலகை காண்கிறோம்! இத்தகைய உலகில் யாரை குறை கூறுவது? கலிதான் என்று தாராளமாக சொல்லிவிட முடியும். நம்மிடம் கலி புருஷன் நேரில் வந்து நிச்சயம் மிரட்ட மாட்டான். இதையே ஸ்ரீ சுகப்ரும்மம் சொல்கையில் கலியை 'பெரிய குணசாலி' எனக் கொண்டாடுகிறார். மஹான்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்யாஸம் உண்டல்லவா?

## ஸ்ரீ சுகர் கூறுவது

**'க்லேர் தோஷநிதே: ராஜன் அஸ்திஹ்யேகோ மஹான் குண:**
**கீர்த்தனாதேவ க்ருஷ்ணஸ்ய முக்தஸங்க: பரம் வ்ரஜேத்'**

கலியை ஏன் குணவான் என்கிறார்? தர்மங்களனைத்தையும் விழுங்கிவிட்டானல்லவா கலி! கலியில் ஸ்வதர்மங்களை யாரும் செய்வதில்லை. நித்ய கர்மாக்களை விட்டு பேராசையால் கலியில் காம்ய கர்மங்களை மட்டும் (விரும்பிய பலன்களை தரும் தர்மங்களை மட்டும்) செய்கிறவர்களுக்கும் அது பலிப்பதில்லை. காரணம் நித்ய கர்மானுஷ்டான பலம் இல்லாதவன் செய்யும் காம்ய தர்மங்களை ரிஷிகள் சாம்பலில் செய்த ஆஹுதி போல் வீண் என்கின்றனர். ஞான மார்க்கத்தில் கரையேறி விட்டதாகவே எண்ணி சிலர் பக்தர்களையும், பக்தி மார்க்கத்தையும், அர்ச்சாவதாரங்களையும் குறைவாக மதிக்க மட்டுமே தெரிந்து கொண்டுள்ளனர். வைராக்யமில்லாத ஞானாப்யாஸமும் வீண். இப்படி ஸர்வ தர்மங்களும் அழிந்து விட்டபோதிலும் ''அஸ்திஹி ஏகோ மஹான் குண:'' என்கிறார் ஸ்ரீ சுகர். 'அஸ்திஹி' என்பதால் ஓர் உயர்ந்த குணம் இருக்கிறதே அது மற்றெல்லா தோஷங்களையும் இருக்குமிடம் தெரியாமல் செய்து விடுகிறதே! என்கிறார். ஸனாதன தர்மத்திலுள்ளது போல் இதில் பல்வேறு பேதங்கள் கிடையாது என்பதையே 'ஏக:' என்பதால் கூறுகிறார். அதாவது யாவருக்கும் ஒரே விதமான தர்மம். மேலும் இப்படி ஒன்றுதான் உயர்ந்த தர்மமா? வேறு ஏதாவது இம்மாதிரி உயர்ந்தது உண்டா? என்கில் 'ஏக:ஹி' என்று இது ஒன்றேதான். இதற்கு ஈடான தர்மம் மற்றொன்று கிடையாது என்கிறார். அத்தகைய மிகப் பெரிய குணமுடைய தர்மம் எது? அதுவே 'கீர்த்தனாதேவ க்ருஷ்ணஸ்ய' என்ற நாம ஸங்கீர்த்தனம்.

நாம கீர்த்தனத்தை ப்ராணனாகக் கொண்ட இந்த தர்மமே பாகவத தர்மம். முற்கூறிய ஸனாதன தர்மத்திற்கும் இதற்கும் ஏதும் விரோதம் கிடையாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். 'பாகவத தர்மம்' என்றால் பகவான் தனது கமல முகத்தாலேயே வெளியிட்டது என்று பொருள். (ஸனாதன தர்மத்தை மனு, ஸனகாதிகள் முதலியோரைக் கொண்டு வெளியிட்டார்.) ஸனாதன தர்மம் ஒரு ஸாதகனுடைய அனுஷ்டானம், ச்ரத்தை இவற்றின் அடிப்படையில் அவனுக்கு நன்மை பயக்க வல்லது. பாகவத தர்மமோ பகவானின் கருணையில் பிறந்தது. ஸாதகனது தகுதியை கருதாமல் பகவத் க்ருபை ஒரு ஜீவனை மிகவும் உயர்ந்த ஸ்தானத்திற்கு

அழைத்துச் செல்லும் அழகை ரசிப்பது தான். இங்கு ஸாதனமான பகவன் நாமாவும் பகவத் ஸ்வரூபமே. பலனும் பகவத் ஸ்வரூபமே. இப்படி ஓர் அபேதம்! கருணை மிகுந்த அன்னை தன் நோய்வாய்ப்பட்ட குழந்தையிடம் எந்த ஸேவையை அல்லது உத்தரவு நிறைவேற்றுதலை எதிர்பார்ப்பாள்? பகவானோ கருணாமூர்த்தி. நாமோ கலிரோக பீடிதர்கள். அன்னையின் பெயரைச் சொல்லி குழந்தை கதறுவது போல் அவன் நாமங்களை கூறுவது தவிர வேறு வழி என்ன உள்ளது?

இந்த நாம கீர்த்தன தர்மத்தை உலகில் காட்ட பகவானே கலியில் ஸாதுக்களின் ரூபத்தில் அவதரித்து இந்த யுகத்தின் தர்மத்தை ஸ்தாபிக்கிறார். பாரதத்தில் அதுவும் நம் தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கில் இத்தகைய அவதார புருஷர்கள் தோன்றி நாம ஸங்கீர்த்தனத்தின் அவசியத்தை ஸித்தாந்தம் செய்துள்ளனர்.

கலிரோக பீடிதர்களான நமக்கு உகந்த தர்மத்தை நமக்கு புகட்ட மிகக் கருணையுடன் வரும் 'மதுர முரளி'யில் ஸ்ரீ பகவந் நாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் தொடக்கமான பல மஹா புருஷர்களை குரு க்ருபையால் அனுபவிப்போம்.

*(தொடரும்)*

**- பரனூர் ஸ்ரீகாந்த சர்மா**

---

*ஸதா ஹரி நாமம் செய்து வருபவனுக்கு எந்த பாவமும் ஒட்டாது. செல்வம் கொழிக்கும். இதை விட சுலபமான வழி ஏதாவது உண்டா?*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# எது ப்ரவசனம்?

**- ஸ்ரீ குருஜி**

தான் எதை உபதேசிக்கிறாரோ, அதை அனுஷ்டானத்தில் வைத்திருக்க வேண்டும். பிறருக்குத் தான் உபதேசம் செய்வதாக நினைக்காமல், பலருடன் சேர்ந்து பகவத் விஷயத்தை அனுபவிக்க இது ஒரு சந்தர்ப்பம் என்று நினைக்க வேண்டும். இவ்வளவு ரூபாய் சன்மானம் என்று கேட்கக் கூடாது. அவர்களாகக் கொடுத்தால் வாங்கிக் கொள்வதில் தவறில்லை. வித்வான்கள் இருக்கிற சபையில் அவர்களுக்குத் தகுந்த மாதிரியும், சாமானியர்கள் இருக்கக் கூடிய சபையில் அவர்களுக்கு ஏற்ற முறையிலும் பிரவசனம் செய்ய வேண்டும். ஒரு காலும் ஆத்ம ஸ்துதியும், பர நிந்தையும் இருக்கக் கூடாது. தனிப்பட்ட நபர்களை விமர்சனம் செய்யக் கூடாது. அரசியலையோ, ஜாதி த்வேஷங்களையோ, கிராமியமான பேச்சுக்களையோ பேசக் கூடாது. ஒரு சபையில் தனி ஒருவரை மட்டும் பார்த்துப் பிரவசனம் செய்யக்கூடாது. பத்து பேர் இருந்தாலும் அல்லது ஆயிரம் பேர் இருந்தாலும், உற்சாகம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். எந்த விதமான சித்தாந்தங்களையும், மத ஆச்சாரியர்களையும் கண்டித்துப் பேசக்கூடாது. தன் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துக் கூறலாம். ஒரு காலும் சொல்ல வந்த விஷயத்திலிருந்து விலகக் கூடாது. உப கதைகளையும் உதாரணங்களையும் அதற்குச் சம்பந்தம் உள்ளதாகவே வைத்துக் கொள்ள வேண்டும். இதை ஒரு தெய்வீக பொழுதுபோக்காக நினைக்காமல் சாதனையாக நினைத்துச் செய்ய வேண்டும். கேட்பவர்கள் மனதில் நாம் சொல்லுகின்ற விஷயம் ஓரளவாவது பதிவதற்கான தபஸை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். டாம்பீகமும் அகம்பாவமும் இல்லாமல் இருக்க வேண்டும். வஸ்துவின் கௌரவத்தை ஒரு போதும் குறைக்கக் கூடாது. ச்ரோதாக்களின் (கேட்பவர்களின்) மன நிலையை வஸ்துவின் கௌரவத்தைச் சரியாக புரிந்து கொள்ளும் அளவிற்கு உயர்த்த வேண்டும்.

மேற்படி யோக்யதாம்சம் இருப்பவர்களிடம் பிரவசனம் கேட்டால் தான், அதன் பலனை நாம் அடைய முடியும்.

# ச்ரவணத்தின் அவசியம்

**- ஸ்ரீ குருஜி**

பல கோடி ஜன்மாக்களாக உலக விஷயங்களிலேயே செலுத்தப்பட்ட மனதை தெய்வீகமான விஷயங்களில் செலுத்துவது மிகவும் சிரமம். அநேகமாக, தவறு செய்பவர்களுக்கெல்லாம் தாம் செய்வது தவறு என்று நன்றாகத் தெரியும். இருந்தும், பழக்க வாசனையால், அவர்களால் தவறுகள் செய்யாமலிருக்க முடியவில்லை. ஏதோ ஒரு ஊருக்குச் சென்று விட்டு வந்த ஒருவர் அவ்வூரைப் பற்றி அழகாக வர்ணிப்பதைக் கேட்டு, நமக்கும் அங்கு போக வேண்டும் என்ற ஆவல் உண்டாகிறதல்லவா? அது போல, சில விஷயங்களைப் பற்றிப் படிப்பதாலும் பார்ப்பதாலும், ஆவல் உண்டாவதும் நிஜம். படிப்பதாலும் பார்ப்பதாலும் ஏற்படும் ஆவலைக் காட்டிலும் கேட்பதினால் ஏற்படும் ஆவல் அதிகம் என்பது நமக்கே நன்றாகப் புரியும். அது போல, தெய்வீக விஷயங்களையும், மஹாத்மாக்களைப் பற்றியும் நாம் ச்ரவணம் செய்ய வேண்டும்.

இது மாதிரியான விஷயங்களை ஒரு முறை கேட்டாலோ, ஒரு முறை படித்தாலோ மட்டும் போதாது. மனது சிறிது காலம் சாத்வீக விஷயங்களில் ஈடுபட்டுவிட்டுப் பிறகு வழக்கம் போல உலக விஷயங்களுக்குச் சென்று விடும். மனதானது உலக விஷயங்களில் ஈடுபடாமல் எப்பொழுதும் சாத்வீக விஷயங்களிலேயே நிலைத்திருக்கும் வரை நாம் ச்ரவணத்தை விட்டு விடக்கூடாது. நவ வித பக்தியில் ச்ரவணமும் ஒன்றாகும். மேலும், பரீக்ஷித்து மஹாராஜா ச்ரவணம் ஒன்றினால் மட்டுமே மோக்ஷத்தை அடைந்துள்ளார். தேவையில்லாத விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பவரிடமிருந்து கேட்பதும் தவறு. நல்ல விஷயங்களைச் சொல்பவரிடம் அவைகளைக் கேட்காமலிருப்பதும் தவறு. உலகத்தில் உள்ள எந்த ஜீவராசிக்கும் இல்லாத வாக் சக்தியை ஈச்வரன் நமக்கு அளித்துள்ளான். எதற்காக என்றால், அதை வைத்துக் கொண்டு, அவனைப் பற்றிப் பேசிக் கொண்டு, அவனை அடைய வேண்டும் என்பதற்காகவே. இதற்கு வாக் தேவதையான ஸரஸ்வதி நமக்கு எல்லோருக்கும் அனுக்ரஹம் செய்யட்டும்.

# பக்தி

- ஸ்ரீ குருஜி

உலகம் தெய்வத்தின் வசம் உள்ளது. தெய்வமோ மந்திரத்தின் (நாமத்தின்) வசம் உள்ளது. அபேதமான பாவத்தில் உபாசிப்பவர்கள் வேதாந்திகள். பேத பாவத்தில் உபாசிப்பவர்கள் பக்தர்கள். சிவ அம்சமுள்ளவர்களுக்கு வேதாந்த ருசியும், விஷ்ணு அம்சமுள்ளவர்களுக்கு பக்தி ருசியும் உண்டாகும் என்பது வழக்கு. ஆகவே தான் சிவ யோகி, சிவ ஞானி என்றும், ஹரி பக்தாள், பாகவதாள் என்றும் வழக்கத்தில் வந்துள்ளது. ஆகவே, பக்தி என்பது பிரசித்தமாக விஷ்ணுவிடமே செய்வது ஏற்றமாக உள்ளது. பக்தியில், அதிகமாக ஸ்மரணமும், ச்ரவணமும், கீர்த்தனையும் விதிக்கப் பட்டுள்ளதால், உபாசிக்க வேண்டிய தேவதைக்கு சரித்திரமும், லீலையும், அழகும், சௌலப்யமும் இருக்கவேண்டியதாக உள்ளது. இவை அனைத்தும் பூர்ணமாக ஸ்ரீ ஹரியிடம் உள்ளதால், பக்தர்கள் அனைவரும் ஹரி பக்தர்களாக இருக்கிறார்கள். இதுவரை நாம் எவ்வளவோ வேதாந்த மார்க்கத்தில் வந்த மஹாத்மாக்களின் சரித்திரங்களைப் பார்த்தால், அவர்களும் ஒரு தெய்வத்தின் துணை கொண்டுதான் அப்படிப்பட்ட வேதாந்த தத்துவத்தை அடைந்தது தெரிய வருகிறது. தெய்வமே வேண்டாம் என்று வேதாந்த மார்க்கத்தில் பிரவேசித்த பலருக்கும், குரு என்பவர் நிச்சயமாக உண்டு. குரு என்பவர், ஈச்வரனின் ஒரு அம்சமாகவே ஆவதால், அவர்களும் எவ்வளவுதான் தெய்வத்தை உபாசிக்காவிட்டாலும், தன்னை அறியாமலேயே துவைத பாவத்திற்கு வந்துவிடுவதைப் பார்த்திருக்கிறோம். அவர்களனைவரும், உபாசகர்கள் தங்கள் இஷ்ட தெய்வத்திடம் காட்டும் பக்தியைக் காட்டிலும், அதிகமான பக்தியை தங்கள் குருவிடம் காட்டி இருப்பதைக் காண்கிறோம். அபேதமான ஒரு பாவத்தை அடைவதற்கு, அளவில் வித்தியாசம் இருந்தால் கூட, பேத பாவம் இல்லாமல் அடைவது அசாத்தியம். பக்தி என்பது ஒரு அழகு.

இந்த பக்தி ராஸிக்யமான இதயமுள்ளவர்களுக்கே புரியக்கூடியது. இது ஒரு உணர்வு. ஆகவே ஒரு வரையறைக்கு உட்படாதது. இப்படித்தான் பக்தி செய்யவேண்டும் என்று சொல்லிக் கொடுக்க முடியாது. இது ஒரு **பா**வம். ஒரு தாய்க்கு தன்னுடைய குழந்தையிடம் ஸ்வ**பா**வமாக ப்ரேமை இருக்கும். அது போல இறைவனிடம் ஒருவனுக்கு ஸ்வ**பா**வமான ப்ரேமை ஏற்படவேண்டும். இப்பேர்ப்பட்ட ப்ரேமையை ஏற்படுத்திக் கொள்ள முடியாது. எந்த விதமான எதிர்பார்ப்புமின்றி (மோக்ஷம் உட்பட) பக்தி செய்வதுதான் ப்ரேம பக்தி. இத்தகைய பக்தியில், ஒருவனுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும், அவன் பொருட்படுத்த மாட்டான். பக்தியையும், லௌகீக விஷயங்களையும் சம்பந்தப்படுத்திக் கொள்ள மாட்டான். தெய்வம் சர்வத்திலும் வியாபித்துள்ளதால், உபதேசம் என்பது தெய்வத்திடமிருந்தோ, குருவிடமிருந்தோ நேரில் வர வேண்டும் என்ற அவசியமில்லை. உலகத்தில் உள்ளவற்றில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் உபதேசமே. உலகத்தில் அநேக மஹாத்மாக்கள் கடுமையான ஸாதனையின் மூலம் தான் இறைவனை அடைந்துள்ளார்கள் என்பது உண்மையானாலும், அப்படி ஸாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாவதற்குக் காரணமும் தெய்வ அனுக்கிரஹமே. மாயையிலிருந்து விடுபட மாயை கலப்பில்லாத தெய்வத்தின் துணை தேவை. தெய்வத்தின் க்ருபையின்றி, ஒருக்காலும் மாயையிலிருந்து விடுபட முடியாது.

---

*தெய்வீக வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு கஷ்டம் வராது என்று அர்த்தமில்லை. நாம் கடலில் நீச்சல் அடிக்க மிகவும் சிரமப்படுவோம். மீனவர்கள் பழக்கத்தினால் சுலபமாக அலைகளை எதிர்த்துக் கொண்டு நீச்சல் சர்வ சாதாரணமாக அடிப்பார்கள். அது போல ஸத் ஸங்கத்தில் உள்ளவர்கள் எல்லா பிரச்னைகளையும் சுலபமாக எதிர் கொண்டு பகவானுடைய சரணத்தை நோக்கி சென்று கொண்டே இருப்பார்கள்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# தமோ குணத்தை அடையாளம் கண்டு கொள்வோம்.

- ஸ்ரீ குருஜி

---

**உ**ண்மையில் மனதில் நல்ல மனது என்றும் கெட்ட மனது என்றும் இரண்டு மனதுகள் கிடையாது. மனது சுப வாசனைகளை பற்றிக்கொண்டு நிற்கும்போது நல்ல மனது என்றும், கெட்ட வாசனைகளை பற்றிக்கொண்டு இருக்கும் போது கெட்ட மனது என்றும் கூறுகின்றோம். ஆகவே முழுவதுமாகவோ ஒருவர் நல்லவர் என்றோ, ஒருவர் கெட்டவர் என்றோ இல்லை. சுப வாசனைகள் அதிகமாக உள்ளவர்களை நல்லவர்கள் என்றும், அசுப வாசனைகள் அதிகமாக உள்ளவர்களை கெட்டவர்கள் என்றும் உலகம் அழைக்கின்றது. அப்படிப்பட்ட வாசனைகளை நாம் ஸாத்வீக வாஸனை என்றும், ராஜஸ வாஸனை என்றும், தாமஸ வாஸனை என்றும் பிரித்துப் பார்ப்போம். ஸாத்வீகத்திலேயே தெய்வீகமான ஸாத்வீகம் என்றும் லௌகீகமான ஸாத்வீகம் என்றும் பிரிக்கலாம். உலகத்தில் உள்ள ஏழைகளைப் பார்த்து இரக்கப்படுவது, அநாதைகளை கண்டு துக்கிப்பது, விதவைகளைக் கண்டு துக்கிப்பது, வியாதியஸ்தர்களை கண்டு துக்கிப்பது, அடி மாடுகளைக் கண்டு துக்கிப்பது, துன்பப்படும் மிருகங்களைக் கண்டு இரக்கப்படுவது, வயோதிகர்களுக்கு உதவுவது, சமூக சேவை செய்வது போன்றவைகள் லௌகீகமான ஸாத்வீகம். எப்பொழுதும் நாம ஸங்கீர்த்தனம் செய்வது, பகவத் குணம் கேட்பது, பாராயணம் செய்வது, பகவானுக்கோ, குருவுக்கோ கைங்கர்யம் செய்வது, ஸாதுக்களை ஸேவிப்பது, தீர்த்த யாத்திரை செல்வது,

க்ஷேத்ராடனங்கள் செய்வது, விரதம் இருப்பது, பூஜை செய்வது போன்றவைகள் தெய்வீகமான ஸாத்வீகம். ராஜஸம் என்பதிலும் லௌகீகமான ராஜஸமும் தெய்வீகமான ராஜஸமும் உண்டு. உலகத்தில் பட்டம், பதவி, பணம், புகழ் என்பதற்காக ஓயாமல் உழைப்பது அதற்காக எதையும் செய்யத் தயாராக இருப்பது, துணிவுடன் செயல்படுவது போன்றவை லௌகீகமான ராஜஸம் ஆகும். தெய்வீக வாழ்க்கையில் ஈடுபட்டு, தன்னை மகானாக பிரகடனப்படுத்திக் கொள்வது, எல்லோரையும் ஏக வசனத்தில் அழைப்பது, பணத்தினால் எல்லோரையும் விலைக்கு வாங்குவது, ஸித்திகளால் தன்னை சேர்ந்தவர்களை பயமுறுத்தி வைப்பது போன்றவைகளும், தான் செய்யும் ஜபம், பக்தி, ஸாதனை இவைகளை பிறர் அறியச் செய்வதும், விளம்பரப்படுத்திக் கொள்வதும், தான் செய்யும் கும்பாபிஷேகம், உபகாரம் போன்றவற்றில் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்வதும், எல்லாவற்றிலும் தனக்கே முதல் மரியாதை வேண்டும் என்று ஆசைப்படுவதும், காம்ய பக்தி செய்வதும், உலகத்தில் பக்தியோ ஸத் கார்யங்களோ தன்னைப் போல் யாரும் செய்ய முடியாது என்று நினைப்பதும், பிறரை தூஷிப்பதும், உலகத்தில் பக்தியும் ஸத்கார்யங்களும் பரப்பப்பட வேண்டும் என்று கூறிக்கொள்வதும், ஆனால் அதை மட்டும் தான் செய்ய வேண்டும் என்று நினைப்பதும், தனக்கு தனிப்பட்ட மரியாதையும், பூஜையும் வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தெய்வீகமான ராஜஸ குணம்.

குடும்பத்தில் உள்ள சிரமங்களின் தொந்தரவாலோ அல்லது அரைகுறையாக எதையாவது கேட்டுவிட்டு அல்லது படித்துவிட்டு தனக்கு ஞானமோ பக்தியோ வந்துவிட்டதாக கற்பனை செய்து கொண்டு, அடைய வேண்டியது எதுவுமில்லை என்று சந்தோஷித்து ஒரு காஷாயத்தைக் கட்டிக்கொண்டு வேளா வேளைக்கு காபி, டிபன் சாப்பிட்டுவிட்டு கங்கைக் கரையில் காற்று வாங்கிக் கொண்டு, அவ்வப்பொழுது ஏதாவது தெய்வம், பிரம்மம், பகவத் ஸங்கல்பம்

என்று பேசிக்கொண்டு, காமக்ரோதாதிகளை ஹ்ருதயத்தில் மறைத்து வாழ்வது தெய்வீகமான தாமஸ குணம்.

குடும்பத்தில் இருந்து யாரையும் பற்றிக் கவலைப்படாமல் அழுக்கு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு நன்றாக சாப்பிட்டு விட்டு, வீட்டு திண்ணையில் எப்பொழுதும் தூங்கிக் கொண்டு, சீட்டு விளையாடி, ஊர் வம்பு அடித்து, டீவி பார்த்துக் கொண்டு, கல்யாணத்திற்கு நிற்கும் பெண்ணைப் பற்றிக் கவலைப்படாமலும், பிள்ளைகளின் படிப்பைப் பற்றி கவலைப்படாமலும், மனைவி எப்படி குடும்பம் நடத்துகிறாள் என்பதைப்பற்றி சிந்திக்காமலும் குடும்பத்தில் குழப்பம் அதிகமானால் வீட்டை விட்டு ஓடி, பிறகு சிறிது காலம் கழித்து வருவது, வெற்றிலை, பாக்கு, புகையிலை போட்டுக்கொள்வது, எல்லா வேலைகளையும் நாளைக்கு என்று தள்ளிப்போடுவது, ஓயாமல் தூங்குவது, அதிகாரம் உள்ளவர்களிடம் பயந்து, ஏமாந்தவர்களிடம் வரட்டு அதிகாரம் செய்வது போன்றவைகள் எல்லாம் லௌகீகமான தாமஸ குணம் ஆகும்.

ஆகவே அநேகம் நபர்கள் தங்களுடைய தமோகுணங்களை ஸாத்வீக குணங்களாக நினைத்துக் கொண்டு சந்தோஷப்பட்டு கொள்கின்றனர். அப்படி இல்லாமல் தெய்வீக, ஸாத்வீக மார்க்கங்களை கடைப்பிடித்து சுத்தமான ஸாதுக்களாக வாழ்வோமாக.

---

*தெய்வீகம் என்பது நம்மிடம் தானாக மிளிர்வது. நாம் முயற்சி செய்து கொண்டிருந்தால் தக்க தருணத்தில் அது நம்மை வந்து தாமாக அடையும்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# யார் வைராக்யசாலி?

- ஸ்ரீ குருஜி

உலகத்தில் மக்கள் அநேகமாக யாராவது காவி உடை அணிந்து கொண்டு சன்யாச வேஷத்தில் இருந்தால் அவர்களை மிகவும் வைராக்யசாலிகளாக நினைத்து கொண்டாடுகின்றனர். உலகத்தில் பட்டினி என்பதற்கும் விரதம் என்பதற்கும் வித்யாசம் உண்டு. யாருக்கு உண்பதற்கு ஆகாரம் இல்லாமல் அதனால் சாப்பிடாமல் இருக்கின்றானோ அவன் தான் பட்டினி கிடக்கின்றேன் என்கின்றான். எல்லாவிதமான ஆகாரமும் சாப்பிடுவதற்கு இருந்தும் சாப்பிடாமல் இருப்பவனை விரதம் இருக்கின்றான் என்று கூறுகின்றோம் அல்லவா! அது போல நடைபாதையிலும், மரத்தடியிலும், கோவில்களின் வாசல்களிலும் உள்ள பிச்சைக்காரர்களை, அனைவரும் இருப்பதற்கு வீடு, நாளைய உணவைப் பற்றி தீர்மானம், உடைமைகள் ஏதும் இன்றி இருந்தாலும் அவர்களை யாரும் மஹாத்மாக்களாகவோ வைராக்யசாலிகளாகவோ நினைப்பதில்லை. உடம்பு நல்ல திடகாத்ரமாக இருந்து அப்படி இருந்தால் அவர்களை சோம்பேறிகளாக நினைக்கின்றோம். அங்கஹீனர்களாகவோ, வியாதியஸ்தர்களாகவோ இருந்தால் அவர்கள் மேல் கருணை உண்டாகின்றது அல்லவா! ஒருவன் வேஷத்தால் மஹாத்மாவாகவோ வைராக்யசாலியாகவோ ஆக முடியாது. காஷாயம் கட்டிக்கொண்டவுடன் ஞானமோ பக்தியோ வைராக்யமோ வந்துவிடும் என்றால் அனைவருமே காவி தரித்து கொள்ளலாமே! இது ஒரு அடையாளம் மட்டுமே. அது மாதிரி பீடத்தினாலும் உடனே ஞானம் வந்துவிடாது. ஸ்தானத்தினாலும் ஞானம் வராது.

பெரிய கோடீஸ்வரன் சில லட்சங்களை தர்மம் செய்வது பெரிய விஷயமில்லை. ஏழை ஒருவன், அதாவது தன்னுடைய அன்றைய

பொழுது வாழ்க்கைக்கே கஷ்டப்படுகிறவன், சிறிதளவு தர்மம் செய்தாலும் அது உயர்ந்ததே. அது போல தன்னுடைய முழு வாழ்க்கையையும் இறைவனுக்கு என்று அர்ப்பணித்தவர்கள் பல மணி நேரம் தியானம் செய்வதைக் காட்டிலும், பல சிரமங்களுக்கு நடுவே சம்சாரி சிறிது நேரம் இறைவனை தியானிப்பது சிறந்ததல்லவா? அது போல குடும்பத்தைத் திண்டாடவிட்டு விட்டு தான் மட்டுமாக கிளம்பி வந்த ஒருவன் வைராக்யத்துடன் இருப்பது ஆச்சர்யமில்லை. அவன் புருஷன் தானே! ஆகவே மரத்தடியிலோ, திண்ணையிலோ படுத்துக் கொண்டு விடுவான். கிடைத்த ஆகாரம் அவனுக்கு மட்டும்தானே. அவன் யாரையும் காப்பாற்ற வேண்டாமே. யாருக்காகவும் அவன் கவலைப்பட வேண்டியதுமில்லை. அவன் ஒண்டிக்கட்டையாய் இருப்பதாலும் புருஷனாக இருப்பதாலும் தேவையும் அதிகமில்லையே. எப்படியானாலும் அவன் வாழ்ந்துவிடலாம். ஆனால் கல்யாணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் சம்சார வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே எதையும் பற்றி கவலைப்படாமல் பக்தி செய்கின்றானே, அதுதான் உயர்ந்தது.

தன்னுடைய மனைவியின், குழந்தைகளின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும், அவர்கள் இருக்க ஒரு இடம் இருந்தாக வேண்டும். அவர்களுடைய ஆகாரத்துக்கு வழி செய்ய வேண்டும். இத்தனை தேவைகளுக்கு நடுவிலும் பக்தி பண்ணிக்கொண்டு, பூரண வைராக்யத்துடன் ஞானிகளாக வாழ்ந்த துக்காராம், தியாகராஜ ஸ்வாமிகள், புரந்தரதாஸர், ஸத்குரு ஸ்வாமிகள் போன்ற அநேக மஹாத்மாக்களே பூரண வைராக்யசாலிகள்.

எந்த ஒரு கார்யத்தையும் மேலோட்டமாக பார்க்காமல் ஊடுருவி பார்க்க வேண்டும். ஸ்ரீமத் ராமாயணத்தில் அணில் செய்த உதவிக்கு அப்படி என்ன பெருமை என்றால், சேது பந்தனம் பண்ணும் காலத்தில் பெரிய பெரிய பாறைகளாகக் கொண்டு போடும் பிரம்மாண்டமான வானரப் படைகளின் நடுவில் இந்த அணில் மாட்டிக் கொண்டால் சட்னி; பிரவாகமாக அலை அலையாக வரும். அலைகளின் நடுவே மாட்டிக் கொண்டாலும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். இதன் நடுவில் அது கைங்கர்யம்

செய்ததுதான் உயர்வு, அழகு அல்லவா! அது போல எதைக் கண்டும் ஓடாமல், ஒளியாமல், பயப்படாமல், தீரனாக இருந்து பக்தி, வைராக்ய, ஞானத்துடன் வாழ்வதுதான் அழகு. அதுதான் ராமாவதாரத்தின் தாத்பர்யமும் கூட.

ஒரு மஹாத்மா பிரம்ம சாக்ஷாத்காரம் அடைந்து ஒரு மரத்தடியிலோ, வனத்திலோ, குகையிலோ இருக்கின்றவர். மற்றவர் ஞானியாக இருந்தும் ஸ்ரீ கிருஷ்ணனைப் போல் ஓயாமல் கார்யம் செய்து வருகின்றார். வேதாந்த மதத்தின்படி ஞானியானவன் எந்த கார்யத்தை செய்தாலும் செய்யாதவனே; அப்படி வெளி கார்யத்தில் ஈடுபடுவதால் அவனுடைய அநுபூதிக்கோ ஆனந்தத்துக்கோ ஒரு குறையுமில்லை என்ற ரீதியில் பார்க்கப் போனால் ஞானத்தையடைந்து எங்கோ ஒளிந்து கொண்டு வாழ்பவன், காட்டில் உள்ள தடாகம் போன்றவன். யாருக்கும் அவனால் பயனில்லை. ஆனால் அநுபூதி அடைந்தும், உலகத்தில் ஓயாமல் கார்யம் செய்பவன், நகரத்தில் நடுவில் உள்ள நீர் நிலை போன்றவன். பல பேருக்கு லாபம். உயர்ந்த ஞானத்தை அடைந்தவர்கள் எல்லாம் உலகத்தைக் கண்டு ஓடி ஒளிந்து கொண்டால், நமக்குக் கிடைப்பது அநுபூதியில்லாத வரட்டு பக்தியும், வேதாந்தமுமாகத்தான் இருக்கும்; அல்லது உயர்ந்த மத நூல்களுக்கு அரை குறையான விளக்கங்களும், அபத்தமான விளக்கங்களும் ஏற்பட்டு உண்மைக்கு பங்கம் ஏற்படும். ஆகவே அநுபூதிமானாகவும் இருந்து, ஓயாமல் கார்யமும் செய்து கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா போல் நாம் வாழ, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அருளை வேண்டுவோம்.

---

*ஏகாதசி ஒரு நாளாவது சுத்தப் பட்டினியுடன் விரதம் இருக்க வேண்டும். சாப்பிடாமல் இருக்க முடியாது என்றால், பழங்களோ, பலகாரமோ சாப்பிடலாம். ஒருக்காலும் அன்னம் சாப்பிடக்கூடாது.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 2

உலகத்தில் அநேகம் நபர்கள் பக்தி என்பதை வயதான காலத்தில் செய்து கொள்ளலாம் என்று கூறுகின்றார்கள். ஆனால் வயதான பிறகு சாப்பிடலாம் என்று யாரும் இருப்பதில்லை. ஏனென்றால் சாப்பிடாவிட்டால் சரீரம் இளைத்து அசக்தியாய் விடும். பக்தி செய்யாவிட்டால் ஆன்மா வாடி விடும். மேலும் கர்ம வாசனைகள் ஏறி பல லட்சம் பிறவிகளில் கொண்டு தள்ளி விடும். ஆகவே, பக்தியையும் குழந்தைப் பருவம் முதல் செய்ய வேண்டியதுதான். உலகத்தில் பெரும்பாலோர் சௌகர்யமான வீடு, பதவி, செல்வம், மனைவி, மக்கள், ஆரோக்யம், இவைகளைப் பெறுவதற்குத்தான் பக்தி என்று நினைத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் மேற்கூறிய இவையெல்லாம் எதற்கு என்றால், இவைகளை வைத்துக் கொண்டு பக்தி செய்து ஸாஸ்வதமான வஸ்துவை அடைவதற்குத்தான். இத்தனை சௌகர்யங்களும் இருந்தும், ஒருவனுக்கு பக்தி இல்லாவிடில், பிணத்திற்குச் சந்தனமும், நறுமணத் தைலமும் நகைகளும் பூட்டிய கதைதான். காமத்திலும், காஞ்சனத்திலும் உழலும் மக்களுக்கு என்ன தான் எடுத்துச் சொன்னாலும் இவையெல்லாம் புரியாது.

மஹாத்மாக்களின் ஹ்ருதயத்தைப் புரிந்து கொள்வது நம்முடைய மனதால் இயலாத காரியம். மனிதனுக்கு ஸ்வபாவமாகவே யாரிடமாவது தனி அன்பை வெளிப்படுத்தவேண்டும் என்ற உணர்வு இருக்கிறது. தனக்கென்று குழந்தைகள் பிறக்காத தம்பதிகள், குழந்தையை தத்து எடுத்து வளர்க்கின்றார்கள். எதற்காக? குழந்தை பிற்காலத்தில் தனக்கு சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுக்கும் என்றோ, அல்லது அந்திம காலத்தில் தன்னைக் காப்பாற்றும் என்பதற்காகவா? உலகத்தில் சொந்தப் பிள்ளைகளே, பெற்றவர்களைச்

சோற்றுக்குத் திண்டாட விடுகிறதைப் பார்த்தும் ஏமாந்து போவார்களா என்ன? இல்லை என்றால், பின் எதற்காக இவ்வாறு செய்கின்றனர்? ஒரு தாய் தன் குழந்தையிடம் அன்பை வாரிக் கொட்டுவதைப் பார்த்து, தன் அன்புக்கு வடிகாலாக லாலனை செய்யவே, தன்னுடைய அன்புக்கு வடிகாலாகத்தான் குழந்தையை தத்து எடுத்துக் கொள்கிறார்கள். இந்த அன்பை இறைவனிடம் வைக்கத் தெரிந்தால் அதுவே பக்தி. பக்தி என்பது ரசம். மனோமயமான அதுவே பக்தி.

உத்தியோகத்தில் ஐம்பது, அறுபது வயது ஆனவுடன், காது சரியாகக் கேட்காது, கண் தெரியாது, உடம்பில் அசதி இருக்கும், முன் போல் சுறுசுறுப்பாக இருக்க முடியாது என்பதால் தானே ஓய்வு (Retirement) கொடுத்து அனுப்பி விடுகிறார்கள்? மனதினாலோ, மூளையினாலோ செய்யும் வேலை உடலால் செய்யும் வேலையை விட கடினம் என்று தீர்மானித்துத்தானே, முன்னோர்கள் நீதிபதிகளுக்கும், மந்திரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் அந்தஸ்தும் அதிக சம்பளமும் கொடுத்தார்கள்? பக்தி என்பது மனதை ஸ்திரப்படுத்தி செய்ய வேண்டியதாய் இருக்கிறது. சரீரத்தால் செய்ய வேண்டிய வேலைக்கே லாயக்கில்லை என்று வீட்டிற்கு அனுப்பிய பிறகு, எப்படி மனோமயமான சாதனைகளைச் செய்வது? அது ஒருக்காலும் முடியாது.

நான் இந்த உலகத்தில் சந்தோஷமாகத் தானே இருக்கிறேன், பின் எதற்காக பக்தி, ஸ்வர்க்கம், மோக்ஷம், வைகுண்டம் முதலியவை எல்லாம் என்று கேட்பார்கள். உடம்பில் அவ்வளவு திமிர், ஆணவம் உள்ளது. மரணத்துடன் வாழ்க்கை முடிந்தது என்றால் எப்படியாயினும் இருந்துவிட்டுப் போகலாம். ஆனால் அப்படி இல்லையே! மரணத்திற்குப் பிறகு கடவுளுடைய நியாய தீர்ப்புக்கு உட்பட்டே ஆக வேண்டும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது. அதற்காக பக்தி செய்ய வேண்டும். புண்ணிய பயனால் இந்நாள் வரை சந்தோஷமாய் உள்ளாய். நாளை கஷ்டம் வராது என்று என்ன நிச்சயம்? அதற்காகவும் பக்தி செய்ய வேண்டும்.

இந்த உலகத்தில் ஒருவன், ஒரு சாமியாரைப் பெரிய மனிதர் என்று நினைத்து, பல விதமான சேவைகள் செய்து, மரியாதை

பக்தியுடன் நடத்தி வந்தான். ஒரு நாள் அவர் பூஜ்யர் (பூஜிக்கத் தகுந்தவர்) அல்ல, வெறும் பூஜ்யம் தான் (சைபர் தான்) என்று தெரிந்தால் எவ்வளவு ஏமாற்றம் ஏற்படுமோ, அது போல நீ உலகில் உறவாடும் மனைவி, மக்கள் முதல் வீடு, வாசல் வரை எல்லாம் சத்தியமில்லாத வஸ்து (அநித்யம் அல்லது மித்யை), கனவில் கண்ட லோகம் போல் என்று தெரிந்தால், எவ்வளவு ஏமாற்றம் ஏற்படும்? ஆனால் அதுதான் உண்மை. அதற்காக பக்தி செய்ய வேண்டும்.

உலகத்தில் மனிதன் தன்னை கெட்டிக்காரனாகவும், முயற்சியுள்ளவனாகவும், தொலை நோக்கு செயல்பாடு உள்ளவனாகவும் சொல்லி பெருமைப் படுகிறான். கெட்டிக்காரர்களே! நீங்கள் இருக்கும் நிலை உங்கள் உண்மையான நிலை இல்லை. உங்கள் உள்ளேயே பேரானந்தம் உள்ளது. கெட்டிக்காரர்களான நீங்கள் அதை அறியாமல் இருக்கலாமா? முயற்சியுள்ளவர்களே! உங்களுடைய முயற்சி ஆத்மாவை நோக்கி இருக்கட்டும். தொலை நோக்கு செயல்பாடு (Long term plan) உடையவர்களே! உங்களது செயல்பாடு (plan) மரணத்திற்குப் பிறகும் வரக்கூடிய ஜன்மாக்களுக்குமாக அமையட்டும்.

ஐயா, நான் இதையெல்லாம் நம்பினால்தானே எனக் கேட்கலாம். நம்பாமல் போவதால் சத்யம் மாறாது. பாவத்தில் நம்பிக்கையில்லை என்பதற்காக நரகம் விடப் போவதில்லை. சரி, வாதத்திற்காக உன் கூற்றை ஏற்றுக் கொள்வோம். வெளியில் மழை வரும் அறிகுறி இருப்பதால், குடையை ஒருவன் எடுத்துச் செல்கிறான். மழை வந்தால் குடை உபயோகப்படும். மழை வராவிடினும் ஒன்றும் பாதகமில்லை. மழை இருந்து விட்டால் நீ மாட்டிக் கொள்வாய். நான் சொல்வது போல் நரகம் இருந்தால் அங்கு நீ கஷ்டப் படுவாய். அங்கும் நான் உனக்காக இரக்கப்படுவேன்.

பக்தி என்பதே ரஸம். இப்படியிருக்க, சிலர் விக்ரஹங்களை விட்டு விட்டு பூஜை செய்கிறார்கள். இவர்களுக்குப் பலன் கிட்டுமா என்றால், நிச்சயமாக நினைத்த பலன் கிடைக்கும். ஆனால் பக்தியில் அனுபவம் அதிகம், ஆனந்தம் அதிகம். ஆகவே அர்ச்சாவதாரங்களை வைத்து பூஜை செய்து, புறப்பாடு செய்து, திருக்கல்யாணம் செய்து

பார்ப்பதில் ஆனந்தம் அதிகம். எப்படியென்றால், ஒரு உதாரணம் மூலம் விளக்குகின்றேன். ஒருவன் காலையில் சாப்பிடும் உணவு, இரவு சாப்பிடும் உணவு என்று கணக்கு எடுத்துப் பார்த்தால், இத்தனை கலோரி என்று கணக்கு சொல்லி, அந்த உணவில் இந்த இந்த அளவு A, B, C, D வைட்டமின்கள் இருந்தன எனக் கணக்கிட்டு விடலாம். ஆகவே, ஒருவர் நித்யம் ஆகாரத்திற்குப் பதிலாக அந்த அந்த அளவுக்கு வைட்டமின் மாத்திரைகளாக விழுங்க முடியாது. ஏனென்றால் உடம்புக்கு சக்தி வந்தாலும் பசிக்கும். ருசிக்கவும் ருசிக்காது. ஆகவே, ஆகாரம் என்பது உடலுக்கு சக்தியைக் கொடுப்பதுடன் பசியையும் போக்க வேண்டும். முக்கியமாக ருசிக்கவும் வேண்டுமல்லவா? அது போல சக்தியும், பலனும் தான் முக்கியம் என்று தாயத்தையும், யந்திரத்தையும், கல்லையும், பூஜை செய்ய முடியாது - ரூபத்துடன் கூடிய அழகான ஸ்வாமி வேண்டும். பக்தியின் பலன் மோக்ஷம் தான் என்றாலும் கூட, ஞானியையும் பக்தி ஆகர்ஷிக்கிறது.

இதற்கு ஒரு உதாரணம் கூறலாம். ஒரு குழந்தைக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டால் தாயார் சர்க்கரையில் நெய்யைக் குழைத்துத் தருவது வழக்கம். குழந்தைக்கு வயிற்றுப் போக்கு நின்று விட்டாலும் கூட நெய்யில் தோய்த்த சர்க்கரை சுவையாக இருப்பதால், குழந்தை வயிற்றுப் போக்கு நிற்கவில்லை என்று பொய் சொல்லி வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கும். அது போல் பக்தியின் லட்சியம் மோக்ஷம் தான் என்றாலும் கூட, பக்தியின் சுவையானது லட்சியத்தை அடைந்த பிறகும் கூட ஆகர்ஷிக்கிறது. அவ்வளவு ரஸ ரூபமானது பக்தி. ஒரு தரம் ஹரி நாமம் சொன்னால் மோக்ஷம். பிரபத்தி (சரணாகதி) செய்து விட்டால் வைகுண்டம். அதற்குப் பிறகும் நான் ஏன் பக்தி செய்ய வேண்டும் என்று ஒருவன் கேட்டால், அவன் அரஸிகன்.

ஒருவன் முதலில் தனக்கு ஏதோ சிறிய வேலை கிடைக்க வேண்டுமே என்று நினைக்கிறான். கிடைத்தவுடன், பதவி உயர்வு வேண்டுமே என்று நினைக்கிறான். தன் குடும்பத்துக்கான மாதத் தேவை பூர்த்தியானவுடன், கொஞ்சம் சேமித்து வைக்க ஆசைப்

படுகிறான். பிள்ளைகளின் படிப்பு, குழந்தைகளின் கல்யாணம் என்று சேமிக்கின்றான். பிறகு, தன்னுடைய குழந்தைகளின் பிற்காலத்திற்கு என்று சம்பாதிக்கின்றான். பேரன், பேத்திகளுக்கு என்று சம்பாதிக்கின்றான். பிற்கால தலைமுறைகளுக்காக சம்பாதிக்கின்றான். ஏன்? அவனுக்கு தனம் ருசிக்கிறது. தன்னுடைய தேவை பூர்த்தியானாலும், விடாமல் மேலும் மேலும் பல உபாயங்களைக் கண்டுபிடித்து பேயாய் அலைந்து தலையில் மயிர் முளைத்த நாள் முதல், நரை விழுந்த நாள் வரை சம்பாதிக்கின்றான். தன்னுடைய தேவை பூர்த்தியானவுடன் ஏன் நிறுத்தவில்லை? அவ்வளவு ஆசை, பேராசை, அவ்வளவு ருசி பணத்தில்.

அது போல ஒரே ஒரு தரம் ஹரி நாமம் சொன்னாலும் மோக்ஷம் தான். அதில் சந்தேகமே இல்லை. நமக்கு எப்படி தனத்தில் ருசியும், ஆசையும் விடுவதில்லையோ, அது போல் பக்தியிலும் நாமத்திலும் ருசி விடுவதில்லை. போதும் என்று தோன்றுவதில்லை. ஒருவன் அதிகமாக சேமித்த தனம், எப்படி உலகத்திற்கும், பிற்காலத்திற்கும் உபயோகப்படுமோ, அது போல இவருடைய பக்தியும், நாம பலமும் பல பேருக்கு சத்கதியைத் தரும்.

எங்காவது கோயிலில் ஒரு ஆட்டை பலியிட்டால், என்னே கொடுமை என்று பக்கம் பக்கமாக எழுதுவான், ஆர்ப்பரிப்பான் (நான் அதற்காக இதை நியாயப்படுத்தவில்லை). ஆனால் கசாப்புக் கடையில் கோடிக் கணக்கில் கதறி அழும் பசுக்களையும், ஆடுகளையும் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப் படமாட்டான். விதவைகளுக்குத் திருமணம் நடத்தக் கூடாது என்றால் ஆகா என்ன அநீதி என்பான். விபச்சாரிகள் விடுதியில் கஷ்டப்படும் பெண்களைப் பற்றிக் கவலைப் பட மாட்டான். பெற்ற அம்மா, அப்பா, மாமனார், மாமியார் இவர்களையெல்லாம் அடித்துத் துரத்திவிடுவான். அனாதைகளுக்கு இரக்கப்பட்டு மாதா மாதம் தொகை அனுப்புவான். பிறப்பினால் உயர்வு, தாழ்வு இல்லை, சமத்துவம் தேவை என்று ஒரு பக்கம் பேசுவான். வேறு மாநிலத்துக்காரனைக் கண்டால் அடி என்று மறு பக்கம் பேசுவான். கோவிலில் ஸ்வாமிக்கு எதற்கு அபிஷேகம்? பால், தயிர் எல்லாம் வீண், விரயம் என்பான். ஒரு நாள் வெட்டியானால் எரிக்கப்படவிருக்கும் மலம், மூத்திரம், சளி, பீளை உள்ள சரீரத்திற்கு

ஜவ்வாதும், புனுகும் சாற்றிக் கொள்வான். கோயில்கள் எல்லாம் எதற்கு? தண்டச் செலவு என்பான். கோடிக்கணக்கில் பணம் செலவழித்து சினிமா எடுக்கிறார்களே, அது மட்டும் தேச நலனுக்கு உகந்த செலவாகுமா என்று கேட்டால், அநேகருக்குப் பிழைப்புக்கு வழி செய்கிறது என்பான். கோயில்களாலும் தான் அநேகருக்குப் பிழைப்பு கிடைக்கிறது. இது என்ன யாகம், பூஜை என்ற செலவுகள் எனக் கேட்பான். கிரிக்கெட் விளையாட்டு, ஏசியாட் விளையாட்டுப் போட்டிகள், டென்னிஸ் போட்டி என்று பல கோடிகள் செலவழிப்பதைப் பற்றி வாய் திறக்கமாட்டான். கேட்டால், ஆரோக்கியமும், சந்தோஷமும் ஏற்படுகின்றது என்பான். கோயில்களிலும், பல பேருக்கு மனதில் சந்தோஷமும், காரிய சித்தியும் ஏற்படத்தான் செய்கின்றன. ஒரு கோயில் போதாதா எனக் கேட்பான். மனைவி பட்டுப் புடவைகளை பீரோவில் நூற்றுக் கணக்கில் அடுக்கி வைத்திருந்தாலும், கூடக் கேட்டால் வாங்கித் தந்து விடுவான். புடவைகள்தாம் நிறையவே இருக்கின்றனவே, மேலும் ஏன் வாங்க வேண்டும்? வீடு ஒன்று சொந்தமாக இருந்தாலும் கூட, பல ஊர்களில் மனையும் வாங்குவான். இருந்துவிட்டு போகட்டுமே என்பான். உலகத்தில் நம் விஷயங்களை எல்லாம் தேவைக்கு மட்டும் தான் செலவழித்துக் கொள்கிறோமா என்ன? பார்த்துப் பார்த்து ஆசையாக வாங்கிக் கொள்ளவில்லையா? குடிகாரன் பொழுதுக்கும் குடித்து உடல், பொருள் எல்லாம் விரயமாக்கி, அநேகருக்குத் தொல்லை கொடுக்கின்றான். சிகரெட் பிடித்து கஞ்சா அருந்தி காலையிலிருந்து மாலை வரை சீட்டு விளையாடுகின்றான். சிலர் யாருக்கும் உபயோகமின்றி குடித்தே அழிகின்றனர். முதலில் இவர்களையெல்லாம் சீர்திருத்திவிட்டுப் பிறகு கோயில் பக்கம் வருவோமாக.

**தொகுப்பு - முரளீதரதாஸன்**

---

*பகவத் பக்தியினால்தான் ஸகல கார்யங்களும் பரிமளிக்கும்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*

# செய்திகள்

**July 7, 1995** அன்று திருவண்ணாமலையில் நடந்த ஸ்ரீ ரமண மகரிஷி அதிஷ்டானத்தின் கும்பாபிஷேக நிகழ்ச்சியில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

**July 9, 1995** அன்று சென்னை - 87 வளசரவாக்கம் நல்லோர் வட்டத்தின் முதலாவது ஆண்டு விழாவில் குருஜி கலந்து கொண்டு 'பக்தி யோகம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

★ ★ ★

**July 15, 1995** அன்று சென்னை வளசரவாக்கம் வீரப்ப நகர் 68-ம் எண் க்ரஹத்தில் மாலை 6-30 முதல் 8-30 வரை நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

★ ★ ★

**July 16, 1995** அன்று

1) *சென்னை அசோக் நகர் ஸ்ரீ மல்லிகேஸ்வரர் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண ஹனுமத் ஸமேத ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி விமான ஆலய அஷ்ட பந்தன கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டார்கள்.*

2) *சென்னை-78, சூளைப் பள்ளம், அண்ணா அறிவாலயம் நகர் ஸ்ரீ நாகத்தம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டார்கள்.*

3) சென்னை-26, கோடம்பாக்கம் விஸ்வநாதபுரம் மெயின் ரோடு அக்னிஹோத்ரி ஸ்ரீ மல்லிகார்ஜுன சர்மா க்ரஹத்தில் நாம ஸங்கீர்த்தனம் பகல் 1 மணி முதல் 4 வரை நடைபெற்றது. பக்தர்கள் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ குருஜியும் வந்து இருந்து அனுக்ரஹித்தார்கள்.

4) சென்னை-114 பழவந்தாங்கல் துரைராஜ் லேன் ஸ்ரீ மஹாலிங்கய்யர் க்ரஹத்தில் நாம ஸங்கீர்த்தனம் மாலை 4 முதல் 6 வரை நடைபெற்றது. சுற்று வட்டாரத்திலுள்ள பக்தர்கள் கலந்து கொண்டனர். ஸ்ரீ குருஜியும் கலந்து கொண்டு ராம நாம மகிமையைப் பற்றி உபன்யாசம் செய்தார்கள்.

★ ★ ★

**July 28** முதல் **August 2**-ந் தேதி வரை பெங்களூர் மல்லேஸ்வரம் ஸ்ரீ சங்கர மடத்தில் 'பக்த விஜயம்' தலைப்பில் ஸ்ரீ குருஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள். பக்த கோடிகள் திரளாக வந்திருந்து கதா ச்ரவணம் செய்து ஆனந்தித்தார்கள்.

★ ★ ★

---

*குரு நிந்தை பொல்லாதது. குருவை அலட்சியம் செய்வதாலோ, நிந்தை செய்வதாலோ பல கஷ்டங்கள் ஏற்படும். தெய்வ நிந்தையைக் காட்டிலும் ஸாதுக்களை நிந்திப்பது மிகப் பெரிய பாபம்.*

*- குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்*



**July 17 முதல் 23 வரை** – சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீ அயோத்யா மண்டபத்தில் ஏழு நாட்களுக்கு ஸங்கீர்த்தன ஸப்தாஹம் நடைபெற்றது. பல ஊர்களிலிருந்தும் வெவ்வேறு ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த பாகவதர்கள் கலந்து கொண்டு அஷ்டபதி, திவ்ய நாமம், தேவாரம், திருப்புகழ், ராஸ கானம் முதலிய பல நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். நிறைவு நாளான 23-ந் தேதியன்று ஸ்ரீ ராதா கல்யாணமும் ஸ்ரீ ஆஞ்சநேய வைபவமும் வெகு சிறப்பாக நடந்து முடிந்தன. இவை பற்றிய விரிவான கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.

மேலே உள்ள புகைப்படத்தில் குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷனின் டிரஸ்டி ஸ்ரீ V. சங்கரன், ஸப்தாஹம் Co-ordinator ஸ்ரீ K. முரளீதர பாகவதர் (AG's Office) அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கிறார்.

★ ★ ★

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**August 4 முதல் 10 வரை** - சென்னை கே.கே. நகர் அம்மன் கோவிலில் 'பக்த விஜயம்' பற்றி ஸ்ரீ குருஜி சொற்பொழிவாற்ற உள்ளார்கள். நேரம் 7 முதல் 8.30 p.m

★ ★ ★

**August 12** தஞ்சை ஜில்லா புலியூர் கிராமத்தில் நடைபெற உள்ள ஸ்ரீ சீதா கல்யாண வைபவத்தில் ஸ்ரீ குருஜி கலந்துகொண்டு ப்ரவசனம் நிகழ்த்துவார்கள்.நேரம் 7 முதல் 9 p.m

★ ★ ★

**August 14** - சென்னை மேற்கு மாம்பலம் ஸ்ரீ அயோத்யா மண்டபத்தில் நடைபெற உள்ள ஸ்ரீ கோகுலாஷ்டமி வைபவத்தில் ஸ்ரீ குருஜி கலந்து கொண்டு, ஆண்டு மலரை வெளியிட்டு, 'ஸ்ரீ கிருஷ்ண ஜனனம்' பற்றிய உபன்யாசம் நிகழ்த்துவார்கள். நேரம் 7 முதல் 9-30 p.m

★ ★ ★

**August 18 முதல் 28-ந் தேதி வரை** சென்னை தாம்பரம் - ஸ்ரீபெரும்புதூர் பஸ் மார்க்கத்திலுள்ள மாஹான்யம் என்ற கிராமத்தில் அமைந்துள்ள 'மதுரபுரி' ஆஸ்ரமத்தில் 'ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி' விழா நடைபெறும்.

**மங்களானி பவந்து**

R. Dis. 2032/95

# மதுரமுரளி

Annual Subs. Rs. 60/-    Single Copy Rs. 5/-

வேணு : 1    ஆகஸ்டு 1995    கானம் : 2

மதுர முரளி மாத இதழிற்கு சந்தாதாரர்கள் வரவேற்கப் படுகிறார்கள். வருஷச் சந்தா ரூ.60/- தனிப் பிரதி ரூ.5/-

டிமாண்டு டிராப்டை 'குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்' என்ற பெயரில் வாங்கி, உறை மீது

**மதுர முரளி**
**V. சங்கரன்,**
5/3, MIG Flats,
பி.டி. ராஜன் ரோடு,
கே.கே.நகர்,
சென்னை 600 078

என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மணியார்டர் மூலமும் மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

மிஷன் சார்பில் "சாந்தீபனி குருகுலம்" என்ற டிரஸ்டின் கீழ் சாம வேத பாடசாலையும், யஜுர் வேத பாடசாலையும் சென்னை வளசரவாக்கத்தில் நடைபெறுகின்றன. பாடசாலைக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பும் நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு. பாடசாலைக்கு வித்யார்த்திகளையும் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar